# இயல் - பதினொன்று

# சுதந்திரம்

# 11. சுதந்திரம்

மனிதன் தன் வாழ்க்கையில் வாழுகின்றபோது அவன் சுதந்திரமாக வாழ வேண்டும். பிறருக்கு அடிமையாகவும், தாழ்வு மனப்பான்மையுடனும், மற்றவர்களுக்கு அச்சப்பட்டு வாழ்தல் கூடாது. இறைவன் ஒருவனே. அவனுக்கே அடிபணிதல் வேண்டும். அவனுக்கே அச்சப்படுதல் வேண்டும் என்ற எண்ணங்கள் தனிமனிதன் தன் உள்ளங்களில் நினைவு கூர்தல் வேண்டும். இஸ்லாமிய மார்க்கம் மொழியும் சுதந்திரம் குறித்து இவ்வியல் மொழிகிறது.

**தனிமனித சுதந்திரம்**

ஒரு தனிமனிதனின் சுதந்திரம் பரிக்கப்படக் கூடாது. இது நீதி வழங்கும் நிலையில் நோக்கும் போது,

"ஒருவனது குற்றம் நீதி மன்றத்தில் பகிரங்கமாக விசாரிக்கப்பட்டு நிரூபிக்கப்படாத வரை எந்தக் குடிமகனையும் சிறையில் அடைக்கக் கூடாது என்ற கோட்பாட்டினை இஸ்லாம் வழங்கியுள்ளது. ஒரு மனிதனை சந்தேகத்தின் பேரில் கைது செய்வதையோ - சரியான நீதி விசாரணையின்றி அவன் தன்னை நிரபராதி என்று நிரூபிக்க வாய்ப்புக் கொடுக்காமல் சிறையில் அடைப்பதையோ இஸ்லாம் அனுமதிப்பதில்லை"[1] என இஸ்லாத்தில் மனித உரிமைகள் என்னும் நூல் மொழிகிறது. மேலும்,

'ஒரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளிவாயிலில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் எழுந்து 'அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய அண்டை வீட்டுக்காரர்கள் என்ன காரணங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளார்கள்? என்று கேட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கேள்வியை காதில் வாங்கிக் கொண்டு தமது சொற்பொழிவைத் தொடர்ந்தார்கள். அந்த மனிதர் மீண்டும் எழுந்து, அதே கேள்வியையே திரும்பவும் கேட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் பதில் சொல்லாது தமது சொற்பொழிவைத் தொடர்ந்துள்ளார்கள். அந்த மனிதர் மூன்றாம் முறையாக எழுந்து அதே கேள்வியை திரும்பவும் கேட்டார். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் அவரின் அண்டை வீட்டாரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அவர் இருமுறை கேட்ட போதும் அதற்குப் பதில் சொல்லாமல் இருந்ததற்குக் காரணம் இதுதான். காவல்துறை அதிகாரி அந்தப் பள்ளி வாயிலில் தான் இருந்தான். அந்த மனிதரின் அண்டை வீட்டுக்காரர்கள் கைதானதற்குச் சரியான காரணங்கள் இருந்தால், அந்த அதிகாரி எழுந்து தனது நிலையை விளக்கி இருப்பார். காவல்துறை அதிகாரி இந்தக் கைதுகள் பற்றி எவ்விதக் காரணமும் சொல்லாமல் மௌனமாக இருந்ததால் பெருமானார் (ஸல்) அவர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டார்கள்' என வரும் உரையாடலும் காட்டுகிறது. இங்கு, காவல் துறை அதிகாரி (இன்று நாம் செவியுறுவது போல) பின்வருமாறு சொல்லியிருக்கலாம்.

'கைது செய்யப்பட்ட மனிதர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகளை நிர்வாகம் நன்கு அறியும். ஆனால் அக்காரணங்களைப் பொது இடத்தில் வைத்து வெளிப்படுத்த முடியாது. பெருமானார் (ஸல்) அவர்கள் பிரத்தியேக தனி அறையில் அம்மனிதர்களின் குற்றம் பற்றி விசாரணை நடத்தினால், நான் அவர்களுக்கு விளக்கிச் சொல்வேன்'.

ஆனால் காவல் துறை அதிகாரிக்கு இஸ்லாமியச் சட்டம் நன்கு தெரியும். எனவே பேசாமல் இருந்துவிட்டார்.

ஒரு வேலை காவல்துறை அதிகாரி பெருமானார் (ஸல்) அவர்களிடம் அவ்வாறு கூறியிருந்தால் அவர் அந்த இடத்திலேயே வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பார். காவல் துறை அதிகாரியால் கைதுக்கான காரணங்களைப் பகிரங்கமாக நீதி மன்றத்தில் சொல்ல முடியவில்லை என்ற கரணமே கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய உத்தரவிடப் போதுமானதாக இருந்தது. இது தொடர்பான கட்டளை திருக்குர்ஆனில் மிகத் தெளிவாக இருக்கிறது.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ், நீதியை நிலைநாட்டும் படி கட்டளையிட்டுள்ளான்.

> உங்களுக்கு மத்தியில் நான் நீதி செலுத்துமாறு
> கட்டளை இடப்பட்டுள்ளேன்!

எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

ஒரு தனிமனிதனது சுதந்திரமானது நீதிவழங்கும்போது போய்விடக் கூடாது. ஆகையால் அதனைக் காக்க வேண்டும். ஒரு நிரபராதி தனது குற்றம் உண்மையாக நிரூபனமாகாமல் தண்டனை வழங்கப்பட்டால் அவன் சுதந்திரம் பரிபோய்விட்டது. ஆகையால் நீதி வழங்கும் போதும்கூட இஸ்லாமிய மார்க்கத்தில் தனிமனித சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மேலும், குற்றம் நிரூபனம் ஆகும்வரை குற்றவாளி என்று வைத்திருக்கும் மனிதருக்குத் தண்டணை ஏதும் வழங்குதலும் கூடாது என்று இஸ்லாம் கூறுகிறது.

**கொடுங்கோன்மை ஆட்சியும் சுதந்திரமும்**

மனிதர்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள உரிமைகளில் அரசின் கொடுங்கோன்மையை எதிர்த்துப் போராடும் உரிமையும் ஒன்றாகும். இவ்வுரிமையைக் குறிப்பிட்டு,

> அநீதி இழைக்கப்பட்டவனைத் தவிர வேறு யாரும்
> தீங்கான சொற்களை வெளிப்படையாகப் பேசுவதை
> அல்லாஹ் விரும்புவதில்லை (4:148)

எனத் திருக்குர்ஆன் கூறுகிறது. இதன் பொருள் யாதெனில், அல்லாஹ் வசைமொழிகளையும், கண்டனம் செய்யப் பயன்படுத்தப்படும் கடின வார்த்தைகளையும் விரும்புவதில்லை. ஆனால் ஒருவன் அநீதிக்கும் கொடுங்கோண்மைக்கும் பலியாகி இருந்தால், அவனுக்கு ஏற்பட்டுள்ள காயத்திற்கும் பாதிப்புக்கும் வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவிக்க - அல்லாஹ் அத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்த உரிமை வழங்குகிறான். இதன் பொருள் வீணாக வசைமாரி பொழிய அனுமதிப்பது அல்ல. பொறுமையாக நிலையைச் சீர்திருத்துவது சிறப்பானதாகும். அதே சமயம் அக்கிரமத்திற்கு எதிராகப் பேசப் போராட இஸ்லாம் அனுமதி தர மறுக்கவில்லை. அவ்வாறு போராடுவது இறை நெறிக்கு மாற்றமானதல்ல என இஸ்லாம் சொல்கிறது.

இந்த உரிமை தனிப்பட்ட மனிதர்களுக்காக மட்டும் அல்ல. மாறாக எல்லாருக்கும் பொதுவாகவே பொருந்தும் வகையில் இவ்வசனம் உள்ளது. எனவே ஒரு தனிப்பட்ட மனிதன் அல்லது ஒரு குழு அல்லது ஒரு கட்சி ஆட்சியைக் கைப்பற்றி அதிகாரக் கடிவாளத்தை ஏற்றுத் தனிமனிதர்களையோ,

மக்கள் குழுக்களையோ, குடிமக்கள் அனைவரையுமோ கொடுமைப்படுத்தினால், அதற்குப் பகிரங்கமாக எதிர்ப்புக் குரல் எழுப்புவது அல்லாஹ் மனிதனுக்கு வழங்கிய உரிமையாகும். யாருக்கும் இவ்வுரிமையை மறுக்கவோ பறிக்கவோ அதிகாரம் இல்லை. அவ்விதம் யாராவது அவ்வுரிமைகளைப் பறிக்க முயன்றால் அவர் அல்லாஹ்வை எதிர்த்துப் போராடுபவராக விளங்குவார். அத்தகைய கொடுங்கோலர்கள் அக்கிரமங்களை நிலைநிறுத்த மக்களின் எதிர்ப்புகளை அடக்க போராட்டங்களை நசுக்க 144 தடையுத்தரவு போன்ற சட்டங்களை மந்திரக் கோல்களாகப் பயன்படுத்தித் தம்மை காத்துக் கொள்கின்றனர். அத்தகையோர் இவ்வுலகில் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் மறுமையில் எந்தச் சட்டமும் அவர்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்ற முடியாது.

**கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம்**

சிந்திப்பதற்கும் தம் கருத்தை வெளிப்படுத்துதற்கும் இஸ்லாமிய அரசு தனது குடிமக்களுக்கு முழு சுதந்திரம் அளிக்கிறது. ஆனால் ஒரு நிபந்தனையுடன் அவ்வுரிமையை வழங்குகிறது. அவ்வுரிமையைக் கொண்டு ஒழுக்கமும் சத்தியமும் மேலோங்க வேண்டும். ஒழுங்கீனமும், தீமையும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. மேலைநாடுகளில் வழக்கத்திலுள்ள கோட்பாட்டைவிட இஸ்லாத்தின் இந்தக் கருத்துச் சுதந்திரக் கோட்பாடு மிகமிக உயர்ந்தது.

தீமையையும், ஒழுங்கீனத்தையும் பரப்புவதற்கு எந்தச் சூழ்நிலையிலும் இஸ்லாம் அனுமதிப்பதில்லை. விமர்சனம் என்ற பெயரால் வசை மொழிகளையும் தாக்கும் சொற்களையும் பயன்படுத்த யாரையும் அனுமதிப்பதில்லை. உயர் குணத்தையும் ஒழுக்கத்தையும் பரப்புவதற்கு வழங்கப்பட்ட இக்கருத்துச் சுதந்திரம் இஸ்லாமியக் கருத்தோட்டத்தில் ஓர் உரிமை மட்டுமல்ல; கடமையுமாகும்.

ஓர் ஆட்சியாளன் இவ்வுரிமையைத் தனது மக்களுக்கு வழங்க மறுத்தால் அவன் வல்லமையுள்ள அல்லாஹ்வுக்கு எதிராகப் போர் தொடுத்தவன் ஆவான். மக்களைத் தீமையிலிருந்து தடுக்க முயல்வதற்கும் இந்த விதியே பொருந்தும். ஒரு தனி மனிதனோ, ஒரு குழுவோ தனது நாட்டின் அரசோ அந்நிய நாட்டின் அரசோ தீமை புரிந்தால் அத்தீயவர்களை எச்சரிப்பதும், கண்டிப்பதும், அவ்விதம் தீமை புரிவதிலிருந்து அவர்களைத் தடுப்பதும், ஒரு முஸ்லிமுடைய உரிமை

மட்டுமல்ல: கடமையாகும். அதற்கு மேலாக அவன் அதைப் பகிரங்கமாகவும் பொது மக்கள் முன்னிலையிலும் அதைக் கண்டிக்க வேண்டும். மேலும், தீமை புரிகின்ற தனி மனிதன், நாடு, அரசு ஆகியவை பின்பற்ற வேண்டிய நேர்வழியையும் எடுத்துரைக்க வேண்டும். இறை நம்பிக்கையாளர்களின் இந்தக் குணத்தைத் திருக்குர்ஆன்,

> அவர்கள் நன்மை புரியுமாறு ஏவுகிறார்கள்;
> தீமையிலிருந்து தடுக்கிறார்கள் (9:71)

என வரும் வசனத்தில் விளக்குகிறது. இன்னொரு வசனத்தில் நயவஞ்சகர்களின் தன்மைகளைப் பற்றி விளக்கும்போது,

> அவர்கள் தீமை புரியுமாறு ஏவுகிறார்கள்: நன்மையை
> விட்டுத் தடுக்கிறார்கள் (9:67)

எனப் பகர்கிறது. திருமறை இஸ்லாமிய அரசுக்குரிய தலையாய நோக்கத்தைப் பின்வருமாறு உரைக்கிறது.

> அவர்கள் எத்தகையவர்களெனில், நாம் அவர்களுக்கு
> பூமியில் ஆட்சியதிகாரம் வழங்கினால் அவர்கள்
> தொழுகையை நிலை நிறுத்துவார்கள்: ஜக்காத்
> வழங்குவார்கள் மேலும் நன்மை புரியுமாறு
> ஏவுவார்கள்: தீமையிலிருந்து தடுப்பார்கள் (22:41)

எனும் வசனத்தில் பெருமானர் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

உங்களில் யாராவது ஒருவர் தீமையைக் காண நேர்ந்தால் அவர் அதை தனது கரத்தால் (வலிமையைப் பயன்படுத்தி) தடுக்க வேண்டும்! முடியாவிட்டால் தனது நாவினால் தடுக்க வேண்டும். (அதாவது அத்தீமைக்கு எதிராகப் பேச வேண்டும்) அவன் தன் நாவினாலும் தடுக்கமுடியாத நிலையில் இருந்தால், குறைந்தபட்சம் தனது மனத்தாலாவது கண்டனம் செய்யவேண்டும். அதாவது அத்தீமையைக் குறித்து உள்ளத்தில் வெறுப்புக் கொள்ள வேண்டும். இது ஈமானின் (இறை நம்பிக்கையின்) மிகவும் பலவீனமான படித்தரமாகும்.

நேர் வழியின்பால் மக்களை அழைக்கவும், தீயவழியிலிருந்து தடுக்கவும் வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது.

எந்த அரசாவது தனது குடிமகனுக்கு அந்த உரிமையை மறுத்தால் இந்தக் கடமையை நிறைவேற்றுவதிலிருந்து தடுத்தால் அது அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்ததாகிவிடும். அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் ஏற்பட்ட மோதல் அல்ல. இது மாறாக அரசாங்கத்திற்கும் இறைவனுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலாகும். இந்த வகையில் அந்த அரசாங்கம் அல்லாஹ்வை எதிர்த்துப் போர் தொடுக்கிறது. மேலும், அல்லாஹ் மக்கள் மீது உரிமையாய் மட்டுமில்லாது கடமையாயும் ஆக்கிப் பொறுப்பை அது பறித்துக் கொள்கிறது. தீமையையும் ஒழுங்கீனத்தையும் ஆபாசத்தையும் பரப்புகின்ற அரசாங்கம் - ஒழுக்கத்தின் பாலும் நேர்மையின் பாலும் அழைக்கின்ற மக்களுக்கு இடையூறு செய்கின்ற அரசாங்கம் திருக்குர்ஆனின் கருத்தோட்டத்தில் நயவஞ்சகர்களின் - பொய்யர்களின் அரசாங்கமேயாகும்.

**கூட்டமைப்பு உருவாக்கத்திற்கான சுதந்திரம்**

இஸ்லாம் மக்களுக்கு மன்றங்கள் அல்லது கழகங்கள், கட்சிகள் அல்லது இயக்கங்கள் அமைக்கும் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இந்த உரிமையையும் சில பொது விதிகளுக்கு உட்பட்டதுதான். நேர்மையையும் சத்தியத்தையும் பரப்புவதற்குத்தான் இந்த உரிமையைப் பயன்படுத்த வேண்டும். தீமையையும் ஒழுங்கீனத்தையும் பரப்புவதற்கு ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. நேர்வழியையும் ஒழுக்கத்தையும் நாம் பரப்ப வேண்டும் என்பது மட்டுமல்ல. அதைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டுள்ளோம் என்று முஸ்லிம்களைப் பார்த்து புனித குர்ஆன் அறிவிக்கிறது.

> மனித இனத்தைச் சீர்படுத்துவதற்காகத் தோற்றுவிக்கப் பட்டிருக்கும் மிகச் சிறந்த சமூகத்தவராய் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் நன்மை புரியும்படி ஏவுகிறீர்கள். தீமையிலிருந்து தடுக்கின்றீர்கள் (3.110)

எனும் வசனத்தின்வழி, நேர்வழியின் பாலும் ஒழுகத்தின் பாலும் மக்களை அழைத்துத் தீமை புரிவதிலிருந்து அவர்களைத் தடுக்க வேண்டும் என்பது முஸ்லிம்கள் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள கட்டாயக் கடமையாகும் என்பதை அறிய இயலுகிறது. முஸ்லிம் சமுதாயம் அவ்விதம் ஒட்டு மொத்தமாக இணைந்து இந்தக் கடமையை நிறைவேற்றவில்லை என்ற நிலையில்,

> நன்மையின் பக்கம் அழைக்கக் கூடிய ஒரு குழுவினர் உங்களிடையே அவசியம் இருந்திட வேண்டும். அவர்களோ நல்லவை புரியும்படி ஏவ வேண்டும். தீயவற்றிலிருந்து தடுத்த வண்ணம் இருக்க வேண்டும். எவர்கள் இப்பணியைப் புரிகிறார்களோ உண்மையில் அவர்களே வெற்றியாளர் ஆவர் (3:104)

என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதிலிருந்து,

நன்மையின்பால் மக்களை அழைக்கும் தீமைகளிலிருந்து அவர்களைத் தடுக்கும் கடமையைச் செய்வதில் முஸ்லிம் சமுதாயம் அலட்சியம் காட்டுமானால் புறக்கணிக்குமேயானால் அவர்களுக்குள் ஒரு சிலராவது குழுவாகச் சேர்ந்து இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். இது உரிமை மட்டுமல்ல, கடமையுமாகும். இவ்வுலகிலும் மறுமையிலும் வெற்றி கிடைப்பது இக்கடமையை நிறைவேற்றுவதைப் பொறுத்தே உள்ளது என்பது புலப்படுகிறது.

இறைவன் வழங்கிய அருள்நெறியை வைத்துக் கொண்டு முஸ்லிம் நாடுகளில் உள்ள சட்ட சபைகளும் மன்றங்களும் தீமையையும் விஷபத்தையும் பரப்பிக் கொண்டிருக்கின்றன. அதற்காகவே ஆட்சியுரிமை பெறப்படுகிறது. அதே சமயம் நேர்மையையும், நன்மைகளையும் பரப்பப் பாடுபடும் இயக்கங்கள் தொடர்ந்து தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுவதும், சட்ட விரோதமானவை என்று வர்ணிக்கப்படுவதும் வழக்கமாக இருக்கிறது. இந்நிலையில், 'நாங்கள் தான் முஸ்லிம்கள்: எங்களின் அரசுதான் இஸ்லாமிய அரசு' என்றும் பேசுகிறார்கள் ஆனால் செயலில் அதற்கு நேர்மாறாக ஈடுபடுகிறார்கள் ஊழலை மலியச் செய்து, மக்களின் ஒழுக்கத்தையும் தாழ்த்தி விடுகின்றார்கள்.

**சமயக் கோட்பாடும் சுதந்திரம்**

இஸ்லாமிய அரசில் வாழும் குடிமக்களுக்கு மனசாட்சிக்கும் சமயக் கோட்பாட்டுக்குமான உரிமையை இஸ்லாம் வழங்குகிறது. திருமறையில் இறைவன்,

> தீனில் (இறைநெறியை மேற்கொள்வதில்) யாதொரு கட்டாயமோ நிர்பந்தமோ இல்லை (2:256)

எனக் கூறுகிறான். சத்திய நெறியான இஸ்லாத்தைவிட வேறு புனிதமான உண்மையான நேர்வழி இல்லை என்ற போதிலும் தங்கள் நம்பிக்கையை மற்றவர்கள் மீது கட்டாயமாகத் திணிப்பதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இஸ்லாத்தின் தூய்மையான கொள்கைகளை எடுத்துரைக்கவும், அதன்பால் அழைக்கவும், அதற்குப் பொருத்தமான விவாதங்களை மக்கள் முன் வைக்கவும் தான் முஸ்லிம்கள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். இஸ்லாத்தை மேற்கொள்ளும்படி மக்களை கட்டாயப்படுத்தக் கூடாது. யார் அதை ஏற்றுக்கொண்டாலும் தன்னுடைய மன விருப்பத்திற்கேற்ப அதனை ஏற்க வேண்டும். அவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரையும், முஸ்லிம்கள் தமது இருகரங்களாலும் ஆரத் தழுவி வரவேற்று தங்களின் சமுதாயத்தில் அவர்களுக்குச் சமமான உரிமையும் சலுகைகளும் வழங்கி உடன்பிறப்புகளாய் உறவு கொண்டாடுவார்கள். ஆனால் ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், முஸ்லிம்கள் அவரது முடிவினை மதிக்க வேண்டும். எவ்வித ஒழுக்க, சமூக, அரசியல் கட்டாயங்களுக்கும் அவரை உள்ளாக்கி அவரது மனத்தை மாற்ற முயலக் கூடாது.

### அடிப்படைத் தேவைகளுக்கான சுதந்திரம்

ஏழைகளுக்கும் பலகீனமானவர்களுக்கும் இஸ்லாம் உதவிட வேண்டும் என்று கூறுகின்றது. இதனை ஒரு மனிதன் தான் தன் வருமானத்திலிருந்து ஷலாலான முறையில் சுதந்திரமாகப் பிறருக்கு உதவலாம். ஏனெனில் இது ஜக்காத் என்னும் சட்டத்திட்டத்தில் இறைவன் நான்காவது கடமையாக்கியுள்ளான். எனவே தாராளமாக பிறருக்கு உதவுதல் என்பது ஒரு தனிமனித சுதந்திரமே ஆகும்.

வறியவர்களுக்கு உதவியளிக்க வேண்டும் என்ற உரிமையை இஸ்லாம் அங்கீகரிக்கிறது. இதனை,

> அவர்களின் செல்வத்தில் தேவையானவர்களுக்கும் வறியவர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட உரிமை இருக்கிறது (70:25)

எனத் திருக்குர்ஆன் மொழிகிறது. தேவையுடையவர்களுக்குச் செல்வர்களின் செல்வத்தில் உரிமையிருக்கிறது என இந்த வசனத்திலிருந்து தெளிவாகிறது.

தேவையுற்ற ஒருவர் தன் தேவையை நிறைவேற்றும்படி வசதி படைத்தவரிடம் கேட்டால், வசதி படைத்தவர் தன் செல்வத்திலிருந்து அவருக்கு உதவ வேண்டியது கடமையாகும். அது மட்டுமல்ல, வசதி படைத்த ஒருவர் வசதியில்லாமல் இருக்கும் தன் சகோதரின் தேவைகளைப் போக்க முன்வர வேண்டும். அந்த வசதியற்றவர் உதவி கேட்டாலும் கேட்காவிட்டாலும் இதனைச் செய்வது செல்வம் படைத்தவரின் கடனாகும்.

இந்நோக்கத்திற்காக விரும்பிச் செய்யப்படும் தானதர்மங்களை மட்டும் சார்ந்திருக்காமல் இஸ்லாம் கட்டாய தர்மத்தை ஜக்காத்தை உருவாக்கியிருக்கிறது. ஈமான் தொழுகைக்கு அடுத்து இஸ்லாத்தின் மூன்றாவது தூணாக ஜக்காத் விளங்குகிறது. இது தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்கள்,

> அவர்களில் பணக்காரர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு சமூகத்தில் தேவையுள்ளவர்களுக்கு அது வழங்கப்படும்

எனக் கூறியுள்ளார்கள். மேலும் மற்றொரு நபி மொழியில் ஒரு இஸ்லாமிய அரசு ஆதரவற்றவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று இஸ்லாம் ஆணையிட்டுள்ளது.

> பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள் ஆதரவளிக்க யாருமில்லாதவனுக்கு அரசின் தலைமைப் பொறுப்பில் உள்ளவரே பொறுப்பாளி ஆவார்

பெருமானார் (ஸல்) அவர்கள் பயன்படுத்தியுள்ள வலீ என்ற வார்த்தை விரிந்த பொருள் கொண்டதாகும். ஒரு அனாதை அல்லது வயது முதிர்ந்தவர் இருந்தால், உடல் ஊனமுற்றவர் அல்லது வேலை இல்லாதவர் இருந்தால், இயலாதவர் அல்லது யாராலும் ஆதரவளிக்கப்படாத ஏழை இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்வது அரசின் கடமையும் பொறுப்புமாகும். இறந்துபோன ஒருவருக்கு பொறுப்பாளியோ, வாரிசோ இல்லாவிட்டால் அவரது முறையான அடக்கத்திற்கு ஏற்பாடு செய்வது அரசின் கடமையாகும். ஆதரவற்றவர்களைப் பராமரிக்கும் கடமையும் பொறுப்பும் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ளது. எனவே தேவையுள்ளவர்களின் பொறுப்பாளியாகவும்

பாதுகாவலராகவும் இருக்கும் ஓர் உண்மையான இஸ்லாமிய அரசு மக்களின் சுதந்திரத்தை காக்கும் அரசாகும்.

**முடிவுகள்**

❋ எந்தவொரு சூழலிலும் தனிமனிதனது சுதந்திரம் பரிக்கப்படக் கூடாது என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

❋ சட்டங்களை மந்திரக் கோலாகப் பயன்படுத்தி இம்மையில் தம்மைக் காத்துக் கொள்ளும் கொடுங்கோலர்கள் மறுமையில் இறைவனிடம் மாட்டிக் கொள்வர்.

❋ ஒருவரது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை இஸ்லாம் அளிக்கிறது. ஆனால் தீமையையும் ஒழுங்கீனத்தையும் பரப்பும் விதமான கருத்துகளை இம்மார்க்கம் ஒருபோதும் அனுமதிப்பதில்லை.

❋ நேர்மையையும் சத்தியத்தையும் பரப்புவதற்காக மக்களி தங்களுக்கென மன்றங்கள், கழகங்கள், கட்சிகள், இயக்கங்கள் போன்றவற்றை அமைத்துக் கொள்ளும் சுதந்திரத்தையும் வழங்கியுள்ளது.

❋ இஸ்லாத்தின் தூய்மையான கொள்கைகளை எடுத்துரைக்கவும் அதன்பால் அழைக்கவும் அதற்குப் பொருத்தமான விவாதங்களை மக்கள்முன் வைக்கவும் முஸ்லிம்களுக்குக் கட்டளையிடப்பட்டது. ஆயினும் இஸ்லாத்தை மேற்கொள்ளும்படி பிற மக்களைக் கட்டாயப்படுத்தக் கூடாது.

## அடிக்குறிப்பு

1. மௌலானா ஸைய்யத் அபுல் அ.்.லா மௌதூதி, இஸ்லாத்தில் மனித உரிமைகள், ப.42.